## 2026.02.23 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

### 01. தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்கள் மற்றும் பணியாளர்களை வினைத்திறனாகவும் பயனுள்ள வகையிலும் ஒழுங்குபடுத்தல்

அரச துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுகின்ற தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்கள் 1,050 இன் கீழ் தற்போது 150,000 பணியாளர்கள் அளவில் பணிபுரிகின்றமை பதிவாகியுள்ளது. 1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களை முறைமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்கள் மற்றும் அதன் பணியாளர்கள் தொடர்பாக செயற்படுவதற்கான சட்ட ஏற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் குறித்த நிறுவனங்கள் மற்றும் பணியாளர்களை பயனுள்ள வகையில் ஒழுங்குபடுத்தவும் வினைத்திறனாக சேவையை வழங்குவதற்கு குறித்த சட்ட ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதனால், வழங்கப்படுகின்ற சேவையின் இயல்புகளுக்கமைய சேவை வகைப்படுத்தல், குறித்த வகைப்படுத்தலின் அடிப்படையில் பாதுகாப்பு சேவைகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களைப் பயிற்றுவித்தல், தரப்பண்பான சேவையை வழங்குவதற்காக ஒழுக்கநெறிக் கோவையொன்றைத் தயாரித்தல் மற்றும் தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) மட்டத்திலான பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும், தனியார் பாதுகாப்பு நிறுவனங்களைப் பதிவு செய்தல் மற்றும் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்தல் மற்றும் குறித்த நிறுவனங்களுக்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வழங்குதல் போன்ற பணிகளை ஒழுங்குபடுத்துவதற்கு இயலுமாகும் வகையில் புதிய சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. தேசிய சுங்க வரிக் கொள்கையைத் திருத்தம் செய்தல்

இலங்கையின் வர்த்தகம், முதலீடு மற்றும் அரச நிதி நோக்கங்களை அடைவதற்காக வெளிப்படைத்தன்மையுடன் ஊகிக்கக்கூடிய வகையிலும் மற்றும் ஒத்திசைவான (Coherent) சுங்கவரிச் சட்டகமொன்றை நிறுவுவதற்காக தேசிய சுங்கவரிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்புடைய வரிகளுடன் தொடர்புடைய சட்டங்களுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தல் மற்றம் குறித்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் மேலெழுந்துள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் அக்கொள்கையை மீளாய்வு செய்து பொருத்தமான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக 2025.11.03 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, தேசிய சுங்கவரிக் கொள்கைக் குழுவால் அண்மையில் பொருளாதார, அரச நிதி மற்றும் வர்த்தக விவகாரங்கள் தொடர்பான தரவுகளுடன் ஏற்புடைய சட்டங்களுடன் முழுமையாக இணங்கியொழுகாத சுங்கவரிக் கொள்கையின் ஏற்பாடுகள் தொடர்பாக விரிவாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், தேசிய சுங்கவரிக் கொள்கையின் குழப்பமான நிலைமைகளை நீக்குதல் மற்றும் கொள்கை ரீதியான ஏற்பாடுகள் மற்றும் நியதிச்சட்டத் தேவைகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்தல் பற்றி பாராளுமன்றத்தில் அரச நிதி தொடர்பான செயற்குழுவால் வழங்கப்பட்டுள்ள அவதானிப்புக்களும் குறித்த மீளாய்வின் போது கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தேசிய சுங்கவரிக் கொள்கைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொள்கையை அமுல்படுத்துவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



163, කිරුලපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

**03. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் ஜேர்மன் இறக்குமதி மேம்பாட்டுப் பணியகத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடல்**

அபிவிருத்தியடைந்து வருகின்றதும் வளர்முக நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்கு இறக்குமதிகளை மேற்கொள்வதற்காக வசதிகளை வழங்குதல் மற்றும் நிலைபேற்றுத் தன்மையை அதிகரிக்கும் நோக்கில் நிறுவப்பட்டுள்ள நிறுவனமான ஜேர்மன் இறக்குமதி மேம்பாட்டுப் பணியகத்திற்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கும் இடையில் ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதன் மூலம் இயற்கையான மூலப்பொருட்கள் மற்றும் தகவல் தொழிநுட்ப வெளியகத் துறைகளில் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்களுக்கும் மற்றும் பெண்களால் மேற்கொள்ளப்படுகின்ற தொழில்களுக்கும், ஜேர்மன் மற்றும் ஐரோப்பிய சந்தைக்கான அணுகலை அதிகரிப்பதற்கும் ஏதுவாக அமையும். அதற்கமைய, உத்தேச ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் ஜேர்மன் இறக்குமதி மேம்பாட்டுப் பணியகத்திற்கும் இடையில் கையொப்பமிடுவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. தேசிய வீடமைப்பு நடவடிக்கைக் குழுவை அமைத்தல்**

இலங்கைச் சனத்தொகையில் குறிப்பிடத்தக்க அளவினர் வீடற்ற நிலையில் இருக்கின்றமை 2024 ஆம் ஆண்டின் குடிசன மற்றும் தொகைமதிப்பின் மூலம் பதிவாகியுள்ளது. அவர்களில் குறைந்த வருமானங் கொண்டவர்கள், பெருந்தோட்ட சமூகத்தவர்கள், இயலாமைக்குட்பட்ட நபர்கள், மீனவர்கள், வீடற்ற நகர்ப்புற வாழ் மக்கள் மற்றும் பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்துள்ளவர்கள் போன்ற மிக முக்கிய வகுதியினருக்கு வீடுகளின்மை இலங்கை முகங்கொடுத்து வருகின்ற பிரதான சவாலாக உள்ளது. அதனால், பங்கேற்புத் திட்டமிடல், பொருளாதார உற்பத்தித்திறன், சுற்றாடல் பாதுகாப்பு, சமூக ரீதியான உள்வாங்கல் மற்றும் கலாச்சாரப் பொருத்தப்பாடு போன்ற கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு தற்போதுள்ள தேசிய வீடமைப்புக் கொள்கையை மீளாய்வு செய்தல் மற்றும் காலத்தோடு தழுவியதாக மேம்படுத்த வேண்டியுள்ளது. தற்போது அமைச்சுக்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் சமூகமட்ட அமைப்புக்கள் மூலம் பல்வேறு பொறிமுறைகள் மற்றும் தரநியமங்களுக்கமைய வீடமைப்பு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், வீடமைப்புத் துறையின் பொறுப்புக்களும் பரந்துபட்டுக் காணப்படுகின்றன. 2026 ஆம் ஆண்டில் வீடமைப்புக்களுக்கு 100 பில்லியன் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை உயர்ந்தளவில் அடைவதற்காக, தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதும், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள வீடமைப்பு வேலைத்திட்டங்களை, தேசிய ரீதியாக ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு இயலுமை கிட்டும் வகையில் தேசிய நடவடிக்கைக் குழுவொன்றை நியமிக்க வேண்டிய தேவை அடையாளங் காணப்பட்டுள்ளது. அற்கமைய, தேசிய வீடமைப்பு வேலைத்திட்டத்திற்கான வழிகாட்டலை வழங்கல், தொழிநுட்ப ஆலோசனைகளை வழங்குதல், கண்காணிப்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தலையீடுகள் மற்றும் தொடராய்வு செய்வதற்காக தேசிய வீடமைப்பு நடவடிக்கைக் குழுவொன்றை நியமிப்பதற்கு வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. மோட்டர் கிறேடர்கள் 75 இனைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை**

2025.10.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்தின் அடிப்படையில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கான 75 மோட்டர் கிறேடர்களைக் கொள்வனவு செய்வதற்காக தேசிய போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய, சமர்ப்பிக்கப்பட்டுள்ள 05 விலைமனுக்களை மதிப்பீடு

செய்த பின்னர், உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவால் வழங்கப்பட்டுள்ள விதப்புரையின் பிரகாரம், குறித்த பெறுகையை United Tractors & Equipment (Private) Limited இற்கு 1,424.25 மில்லியன் ரூபாய்களுக்கு (பெறுமதி சேர் வரியில்லாமல்) தொகைக்கு வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06. **கெரவலப்பிட்டி கைத்தொழில் வலயத்தில் அமைந்துள்ள அதிவேக நெடுஞ்சாலை நுழைவு தொடக்கம் எலகந்த வீதி வரையான பகுதியை அபிவிருத்தி செய்தல்**

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தால் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள 400 ஏக்கர் காணியில் லிற்ரோ எரிவாயுக் கம்பனி, பெற்றோலிய முனையங்கள் கம்பனி, இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை முதலீட்டு சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள பல கருத்திட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதிவேக நெடுஞ்சாலைக்கு நுழைவதற்கான வழியாகப் பயன்படுத்தப்படும் கைத்தொழில் வலயத்தின் நடுவில் அமைந்துள்ள, கெரவலப்பிட்டி அதிவேக நெடுஞ்சாலை நுழைவு தொடக்கம் எலகந்த வீதி வரைக்குமான 2.2 கிலோமீற்றர்கள் கொண்ட வீதியை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று 2021 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், எமது நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. தற்போது மோசமாகப் பழுதடைந்த நிலையிலுள்ள இவ்வீதியை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனையைக் கருத்தில் கொண்டு, குறித்த வீதியைப் போக்குவரத்துப் பொருத்தமான வகையில் துரிதமாகப் புனரமைப்பதற்கும், பின்னர் நீண்டகால தீர்வாக அவ்வீதியை விரிவாக்கம் செய்வதற்கான முறையான கற்கையை மேற்கொண்டு இடைக்கால வரவு செலவுத்திட்ட சட்டகத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி இவ்வீதியை அபிவிருத்தி செய்வதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. பிரான்ஸ் பரிஸ் சால்ஸ் டீ கோல் விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கான தரைச் சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம்**

பிரான்ஸ் பரிஸ் சால்ஸ் டீ கோல் விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் விமான சேவைக்கான பயணிகள் முகாமை மற்றும் தரை நடவடிக்கை சேவைகளை வழங்குவதற்கான ஒப்பந்தம் மற்றும் களஞ்சியசாலை முகாமைச் சேவைகளுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச போட்டி விலைமுறிக் கோரல் முறைமையைக் கையாண்டு விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 04 விலைமனுக்கள் கிடைத்துள்ளன. உயர்மட்ட நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதப்புரைக்கமைய, கீழ்வருமாறு ஒப்பந்தங்களை வழங்குவதற்காக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது:

- பயணிகள் முகாமை மற்றும் தரை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் கணிசமான பதிலளிப்புடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான Groupe Europe Handling இற்கு 7.73 மில்லியன் யூரோ தொகைக்கு 2026.04.01 தொடக்கம் 03 வருடங்களுக்கு வழங்குவதற்காக
- களஞ்சியசாலை முகாமைச் சேவைகளுக்காக ஒப்பந்தம் கணிசமான பதிலளிப்புடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான France Handling Cargo இற்கு 1.90 மில்லியன் யூரோ தொகைக்கு 2026.02.01 தொடக்கம் 03 வருடங்களுக்கு வழங்குவதற்காக

## 08. அநுராதபுரம் வடக்கு நீர்வழங்கல் திட்டம் - II ஆம் கட்டத்தின் நிர்மாணப் பணிகள் கண்காணிப்புக்கான ஆலோசனை ஒப்பந்தத்தை வழங்கல்

இலங்கை அரசு மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கள் முகவராண்மை நிதியின் மூலம் அமுல்படுத்தப்படும் அநுராதபுரம் வடக்கு நீர்வழங்கல் திட்டம் - II ஆம் கட்டத்தின் கீழ் யான் ஓயா நீர்த்தேக்கத்திலிருந்து நீரைப் பெற்று பதவியா, கஹட்டகஸ்திகிலிய, கெப்பிட்டிகொல்லாவ, ஹொரவபொத்தான போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள குடியிருப்பாளர்களுக்கும் மற்றும் றம்பாவ மற்றும் மதவாச்சி போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள குடியிருப்பாளர்களுக்குப் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் நிர்மாணக் கண்காணிப்புக்கான ஆலோசகரைத் தெரிவு செய்வதற்காக ஜப்பான் ODA கடன் வழிகாட்டலுக்கு இணங்க தரப்பண்பு மற்றும் செலவுகளை அடிப்படையாகக் கொண்ட முறைமையைப் பயன்படுத்தி, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புக்கள் முகவராண்மையால் சுருக்கமாக பட்டியல்படுத்தப்பட்டுள்ள 06 ஆலோசனைக் கம்பனிகளிடமிருந்து கருத்திட்ட முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன. மேலும் 02 நிறுவனங்கள் கருத்திட்ட யோசனைகளை சமர்ப்பித்துள்ளன. குறித்த முன்மொழிவுகளின் தொழிநுட்ப மற்றும் நிதி யோசனைகளை மதிப்பீடு செய்த பின்னர், அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனை பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரையின் அடிப்படையில் இவ் ஆலோசனை ஒப்பந்தத்தை இந்தியாவின் M/s Nippon Koei India Pvt Ltd மற்றும் இலங்கையின் Green Tech Consultatnts Pvt Ltd உடன் இணைந்த வணிகமான M/s Nippon Koei Pvt இற்கு 82.39 மில்லியன் ஜப்பான் யென் தொகை மற்றும் 332.01 மில்லியன் இலங்கை ரூபாவுக்கு (வரியில்லாமல்) வழங்குவதற்கு வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 09. 2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்கு திருப்பியனுப்புதல் விதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்

இலங்கை அரசு உள்நாட்டு வணிக வங்கிகளை இலக்காகக் கொண்டு, வெளிநாட்டு நாணயத் தொகையில் பெயரிடப்பட்ட உள்நாட்டு கடன் கருவியில் வெளியிடுவதற்காக 2025.10.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அதன் முதலாவது வெளியீடு 2025.12.10 அன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆயினும், இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் ஆலோசனைகளால் மேலெழுந்துள்ள மட்டுப்பாடுகளால், குறிப்பிட்ட முதலாவது வெளியீடு கூட்டிணைக்கப்பட்ட வணிக வங்கிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், கேள்வி அதிகரித்தல், போட்டித்தன்மையான விலையிடலை உறுதிப்படுத்தல் மற்றும் அரசுக்குச் சொந்தமான வெளிநாட்டு நாணய நிதி மூலங்களைப் பன்முகப்படுத்துவதற்குப் பதிலாக உள்நாட்டு டொலர் பிணைமுறிகளில் முதலிடுவதற்கு இயலுமை கிட்டும் வகையில் 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள '2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகளைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, 2026.01.30 ஆம் திகதிய 2473/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள '2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஏற்றுமதிப் பெறுகைகளை இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் விதிகள் வெளியிடப்பட்டுள்ளன. குறித்த விதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

2026 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட யோசனைக்கமைய, 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டவரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது. இச்சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**